1994 நவம்பர் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(இ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள்(மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1994ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(ஈ) மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1994*-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் செல்லத்தாக்குதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*1994*-- ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (இரண்டாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

திரு. அ. செல்வராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு என்பது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கிறோம் என்று சொல்லலாம்.

திரு. அ. செல்வராசன்: அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை, எதிர்க்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: இந்தச் சட்டமுன்வடிவை, அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

திரு. வே. தம்புசாமி: நானும் எதிர்க்கிறேன்.